பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

06 10 2023 **FRIDAY** 7 15 **AM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் வளர்ச்சியில் ராஜஸ்தான் மாநிலம் முக்கியப் பங்கு வகிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் அனைத்து வடிவிலான தீவிரவாத செயல்களும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. பருவநிலை துறையில் புதிய ஆராய்ச்சி, துல்லியமான வானிலை கணிப்பு ஆகியவை நாட்டில் விவசாயிகளுக்கும், மீனவர்களுக்கும் பயனளிப்பதாக மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

4. சமானிய மக்களின் வசதிக்காக மருத்துவமனைகளில் ஹோமியோபதி சிகிச்சை அளிப்பதில் அரசு அதிக கவனம் செலுத்தி வருவதாக மத்திய ஆயுஷ் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

5. ஆசிய விளையாட்டுப் போட்டியின் கிரிக்கெட் பிரிவில் சற்றுமுன் தொடங்கிய அரையிறுதி ஆட்டத்தில் பங்களாதேஷ் அணிக்கு எதிராக டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்து வீசி வருகிறது.

>>>><<<<

நாட்டின் வளர்ச்சியில் ராஜஸ்தான் மாநிலம் முக்கியப் பங்கு வகிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அம்மாநிலத்தின் ஜோத்பூரில் சுமார் ஐயாயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, நிறைவடைந்த திட்டங்களை நாட்டிற்கு அரப்பணித்தார்.

நாட்டின் முக்கிய கல்வி நிலையங்களான எய்ம்ஸ் மற்றும் ஐஐடி ஆகியவை ஜோத்பூரில் இருப்பது தமக்கு மகிழ்ச்சி அளிப்பதாக அவர் தெரிவித்தார்.

நாட்டின் கடந்தகால பெருமையை பிரதிபலிக்கும் ராஜஸ்தான், எதிர்காலத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துவது முக்கியம் என்று அவர் வலியுறுத்தினார்.

நாட்டின் வீரம், செழுமை மற்றும் கலாச்சாரத்தை ராஜஸ்தானில் காணமுடிவதாக பிரதமர் குறிப்பிட்டார்.

>>>><<<<

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் அனைத்து வடிவிலான தீவிரவாத செயல்களும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

புதுதில்லியில் தேசிய பாதுகாப்பு முகமை ஏற்பாடு செய்திருந்த தீவிரவாத ஒழிப்பு தொடர்பான இரண்டு நாள் மாநாட்டினை நேற்று தொடங்கி வைத்து அவர் பேசினார்.

தீவிரவாதத்தை ஒடுக்குவதோடு மட்டுமின்றி, தீவிரவாத செயல்களுக்கான கட்டமைப்பு முற்றிலுமாக அகற்றப்பட வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

தீவிரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சர்வதேச ஒத்துழைப்பு அவசியமாகிறது என்றும் அவர் கூறினார்.

தீவிரவாதிகளுக்கு நிதி ஆதாரம் கிடைப்பதை தடுப்பதற்கான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் திரு அமித் ஷா கூறினார்.

இந்த நிகழ்ச்சியில், சிறப்பாக பணிபுரிந்த தேசிய புலனாய்வு அமைப்பு அதிகாரிகளுக்கான விருதுகளையும் அமைச்சர் வழங்கினார்.

>>>><<<<

தெலங்கானா சட்டப்பேரவைத் தேர்தல் நேர்மையாகவும், வெளிப்படைத்தன்மையுடன் நடைபெறுவது உறுதி செய்யப்படும் என்று தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ் குமார் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, கடந்த 3 நாட்களாக அம்மாநிலத்தில் ஆய்வு மேற்கொண்ட பின்னர் ஹைதராபாதில் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

தேர்தலில் பணபலம் பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மாநிலத்தில் உள்ள 80 வயதுக்கும் கூடுதலான 4 லட்சத்திற்கும் மேற்பட்ட மூத்த குடிமக்கள் வீட்டில் இருந்தே வாக்களிக்க அனுமதிக்கப்படுவார்கள் என்றும் அவர் கூறினார்.

மாற்றுத்திறனாளிகளும் அவர்களின் விருப்பத்தின்பேரில் இந்த வசதியை பயன்படுத்திக்கொள்ளலாம் என்றும் திரு ராஜீவ் குமார் தெரிவித்தார்.

>>>><<<<

இந்தியா – ஐக்கிய அரபு அமீரகம் இடையே விண்வெளி, தொழில்துறை, தூய்மை எரிசக்தி தொழில்நுட்பம் உள்ளிட்டவற்றில் ஒப்பந்தம் கையெழுத்தானது.

அபுதாபி சென்றுள்ள மத்திய வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் - ஐக்கிய அரபு அமிரக தொழில்துறை அமைச்சர் டாக்டர் **Sultan Al Jaber** இடையே இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

இருநாடுகளுக்கு இடையே தொழில்துறை வளர்ச்சி மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பத்தில் கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்துவதற்கான நடவடிக்கையாக இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பல்வேறு தொழில் துறைகளில் முதலீடு, தொழில்நுட்ப பரிமாற்றம், புதுமை கண்டுபிடிப்புகளை அமல்படுத்துதல் உள்ளிட்டவை இந்த ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களாகும்.

>>>><<<<

ஊழல், வாக்கு வங்கி அரசியல் மற்றும் குடும்ப அரசியலை அடிப்படையாக கொண்டு எதிர்க்கட்சிகள் ஒருங்கிணைந்த கூட்டணியை ஏற்படுத்தியிருப்பதாக பிஜேபி தலைவர் திரு நட்டா குற்றம் சாட்டியுள்ளார்.

பாட்னாவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், சமூக நீதியின் உண்மையான பாதுகாவலனாக பிஜேபி திகழ்கிறது என்றும் கூறினார்.

இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் மேம்பாட்டிற்கு பிஜேபி உயர் முன்னுரிமை அளித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர்களில் 27 சதவீதம் பேர் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்றும் திரு நட்டா கூறினார்.

>>>><<<<

நாட்டில், விளையாட்டு, கலாச்சாரம், திரைப்படம் ஆகிய துறைகளை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அனுராக் தாக்கூர் தெரிவித்துள்ளார்.

சத்திஷ்கர் மாநிலம், ராய்ப்பூரில் மாநில அளவிலான இளையோர் திருவிழாவை அவர் தொடங்கி வைத்துப் பேசினார்.

சீனாவில் நடைபெற்று வரும் ஆசிய விளையாட்டுப் போட்டியில், இந்திய வீரர்கள் சிறப்பான பங்களிப்பை வெளிப்படுத்தி நாட்டிற்கு பெருமை சேர்த்து வருவதாக அவர் கூறினார்.

ராய்ப்பூரில் உள்ள **Rawatpura** பல்கலைக் கழகத்தில், கேலோ இந்தியா திட்டத்தின் கீழ், இரண்டு விளையாட்டு பயிற்சி மையங்கள் அமைக்கப்படும் என்று அமைச்சர் அறிவித்தார்.

சுற்றுச்சூழல், கல்வி, சுகாதாரம், தூய்மை உள்ளிட்ட துறைகளில் ஏதேனும் ஒன்றை இளைஞர்கள் தேர்ந்தெடுத்து, அதில் நேர்மறையான மாற்றங்களை கொண்டுவர உறுதியேற்க வேண்டும் என்று திரு. அனுராக் தாக்கூர் கேட்டுக் கொண்டார்.

**>>>><<<<**

சமானிய மக்களின் வசதிக்காக மருத்துவமனைகளில் ஹோமியோபதி சிகிச்சை அளிப்பதில் மத்திய அரசு அதிக கவனம் செலுத்தி வருவதாக ஆயுஷ் துணை இணையமைச்சர் டாக்டர் **Munjpara Mahendrabhai** கூறியுள்ளார்.

கொல்கத்தாவில் ஹோமியோபதி ஆராய்ச்சிக்கான மத்திய கவுன்சிலின் பிராந்திய மாநாட்டை தொடங்கி வைத்துப் பேசிய அவர், அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள், மாவட்ட மருத்துவமனைகள், எய்ம்ஸ் மருத்துவமனைகள் ஆகியவற்றில் ஹோமியோபதி சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

எய்ம்ஸ் மருத்துவமனையில் குறைந்த செலவில் இந்த சிகிச்சை அளிக்கப்படுவதாகவும் அமைச்சர் கூறினார்.

**>>>><<<<**

பருவநிலை துறையில் புதிய ஆராய்ச்சி மற்றும் துல்லியமான வானிலை கணிப்பு ஆகியவை நாட்டில் விவசாயிகளுக்கும், மீனவர்களுக்கும் பயனளிப்பதாக மத்திய புவி அறிவியல்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

மகாராஷ்ட்ரா மாநிலம் சத்தாரா மாவட்டத்தில் உள்ள மஹாபலேஷ்வரில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் அவர் கலந்து கொண்டு பேசினார்.

மேம்பட்ட ஆராய்ச்சியின் மூலம் பருவநிலை ஆராய்ச்சித் துறையில் இந்தியா சுயசார்பை நோக்கி சென்று கொண்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

நவீன தொழில்நுட்பத்தின் மூலம் இயற்கை பேரிடர்களை கணிக்க முடிவதாக திரு. கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

>>>><<<<

சிக்கிமில் மழை – வெள்ளத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 18-ஆக அதிகரித்துள்ளது. காயமடைந்த 26 பேர் சிகிச்சைக்காக மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

98 பேரை தேடும் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக அம்மாநில அரசின் தலைமைச்செயலர் திரு **V B Pathak** செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

**Lachen** மற்றும் **Lachung** பகுதியில் சிக்கிய சுற்றுலா பயணிகள் பாதுகாப்பாக இருப்பதாகவும் அவர் கூறினார்.

மழை - வெள்ள பாதிப்பு மற்றும் வானிலை ஆய்வு மையத்தின் எச்சரிக்கை காரணமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாநிலத்தில் உள்ள அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் வரும் 15-ஆம் தேதி வரை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

இதற்கிடையே, சிக்கிம் மாநிலத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள ராணுவ வீரர்கள் மற்றும் பலரது நிலைமை தமக்கு வேதனை அளிப்பதாக தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இதுகுறித்து சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான உதவியையும், ஆதரவையும் வழங்க ஒன்றிணைந்து செயல்படுவோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

>>>><<<<

ஆசிய விளையாட்டுப் போட்டியின் கிரிக்கெட் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் பங்களாதேஷ் அணிக்கு எதிராக டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்து வீசி வருகிறது.

**Hangzhou**-வில் நடைபெற்று வரும் இப்போட்டியில் பங்களாதேஷ் அணி சற்றுமுன்வரை 7 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 31 ரன் எடுத்துள்ளது.

ஹாக்கிப் பிரிவில் இன்று நடைபெறவுள்ள இறுதியாட்டத்தில் இந்தியா - ஜப்பானை எதிர்கொள்கிறது.

கபடி போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் மகளிர் பிரிவில் நேபாளத்தையும், ஆடவர் பிரிவில் பாகிஸ்தானையும் இந்தியா எதிர்கொள்கிறது.

பேட்மிண்டன் ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணை, மலேசிய இணையை எதிர்கொள்கிறது.

ஒற்றையர் பிரிவு அரையிறுதி போட்டியில், எச்.எஸ். பிரணாய் - சீனாவின் **Shi Feng Li**-யை எதிர்கொள்கிறார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 21 தங்கம், 32 வெள்ளி, 33 வெண்கலம் என மொத்தம் 86 பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் தொடர்ந்து 4-ஆம் இடத்தில் நீடிக்கிறது.

179 தங்கம் உட்பட 333 பதக்கங்களுடன் சீனா முதலிடத்தில் உள்ளது.

உலக கோப்பை கிரிக்கெட் போட்டியின் முதல் ஆட்டத்தில் நியூஸிலாந்து 9 விக்கெட் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வென்றது.

அஹமதாபாதில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில், முதலில் பேட் செய்த இங்கிலாந்து அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 282 ரன் எடுத்தது.

283 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய நியூஸிலாந்து அணி 36 புள்ளி இரண்டு ஓவரில் ஒரு விக்கெட் இழப்புக்கு 283 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

அந்த அணியின் **Convay** 152 ரன்னும், **Ravindra** 123 ரன்னும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

ஹைதராபாதில் இன்று நடைபெறவுள்ள போட்டியில், பாகிஸ்தான் - நெதர்லாந்தை எதிர்கொள்கிறது.

**>>>>END<<<<**